# வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | கர்நாடக சங்கீதம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ 01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து புள்ளடியிடுக.

01. செந்துருத்திப் பண்ணில் "மீளா அடிமை ….." என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிய நாயனார் பெயர் யாது?
(1) திருஞான சம்பந்தர் (2) திருநாவுக்கரசர் (3) நம்பியாண்டார் நம்பி
(4) சுந்தரமூர்த்தி நாயனார் (5) திருவாதவூரர்

02. தஞ்சம் என்றாலே என்ற வர்ணம் அமைந்த இராகம் யாது?
(1) ஆரபி (2) ஆபோகி (3) ஹம்சத்வனி
(4) ஷண்முகப்பிரியா (5) ஸாவேரி

03. மனோதர்ம சங்கீதத்தின் பிரிவுகளில் மூன்றாவதாக இடம்பெறுவது எது?
(1) தானம் (2) கற்பனாஸ்வரம் (3) இராகம்
(4) நிரவல் (5) பல்லவிய

04. ஒரே நேரத்தில் இரண்டுக்கு மேற்பட்ட ஸ்வரங்களை வாசிக்கக் கூடிய வாத்தியம் எது?
(1) பஹுத்வனி வாத்தியம் (2) ஸகல வாத்தியம் (3) நிஷ்கள வாத்தியம்
(4) பிரதான வாத்தியம் (5) ஸங்கீத வாத்தியம்

05) ஹிந்துஸ்தானி இசையில் தரானா என்ற உருப்படிக்கு ஒப்பான உருப்படி வகை
(1) பதம் (2) ஜாவளி (3) தில்லானா
(4) திருப்புகழ் (5) அஷ்டபதி

06. "இலட்சண ஸங்கிரஹு" என்ற நூலை வெளியிட்ட வாக்கேயகாரர் யார்?
(1) பீதோவன் (2) மொஸாட் (3) பாக்
(4) அமிர்குஸ்ரு (5) பாத்கண்டே

07. புல்லாங்குழல் வாத்தியத்தில் ஊதும் துவாரத்தின் பெயர் யாது?
(1) தாரரந்திரம் (2) முகரந்திரம் (3) தூம்பமுகம்
(4) ஸ்வரத்துவாரம் (5) ஆதாரரந்திரம்

08. வசந்தா இராகத்தின் ஆரோகண அவரோகணம் எது?
(1) ஸரிகமதநிஸ் ஸ்நிதமகரிஸ
(2) ஸகமதநிஸ் ஸ்நிதமகரிஸ
(3) ஸகமதநிஸ் ஸ்நிதமகஸ
(4) ஸகமதநிஸ் ஸ்நிதபமகரிஸ
(5) ஸரிகமதநிஸ் ஸ்நிதபமகரிஸ

09. கண்ட ஜாதி அடதாள வர்ணம் ஒன்றின் ஒரு ஆவர்த்தனம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரங்களின் எண்ணிக்கை
(1) 36 (2) 66 (3) 46 (4) 56 (5) 16

10. ஆரோகண அவரோகணத்திலேயே அந்நியஸ்வரம் ஒலிக்கும் இராகம்
(1) காம்போதி (2) பிலகரி (3) பைரவி (4) கமாஸ் (5) ஸாரங்க

11. தமிழ் பதங்களில் நாயகனாகப் போற்றப்படும் இறைவன்
(1) சிவன் (2) கிருஷ்ணன் (3) கண்ணன் (4) முருகன் (5) விநாயகர்

12. பாரியாய முத்திரையை தமது உருப்படிகளில் உபயோகித்த வாக்கேயகாரர்
   (1) தியாகராஜசுவாமிகள்
   (2) முத்துஸ்வாமி தீட்சிதர்
   (3) சியாமாசாஸ்திரிகள்
   (4) சுவாதிதிருநாள் மகாராஜா
   (5) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்

13. ரிகிமிதநி என்ற ஸ்வரசங்கேதாட்சரம் குறித்து நிற்கும் இராகம் எது?
   (1) சிம்மேந்திரமத்திமம் (2) ஷண்முகப்பிரியா (3) சங்கராபரணம்
   (4) கல்யாணி (5) கேமவதி

14. ஸரோட் வாத்தியத்திலுள்ள அனுதாபத் தந்திகளின் எண்ணிக்கை யாது?
   (1) $11-13$ (2) $12-13$ (3) $10-11$ (4) $10-12$ (5) $11-12$

15) ஒலியின் உரப்பை அளவிடும் கருவியின் பெயர்
   (1) மீடிறன் மானி (2) ஒலிமானி (3) டெசிபல் மானி
   (4) அதிர்வு மானி (5) ஒலிமட்டமானி

16. பண் கௌசிகத்திற்கு ஒப்பான இராகம்
   (1) பைரவி (2) நவரோஜ் (3) அடாணா
   (4) காம்போதி (5) ஹரிகாம்போதி

17. ஸஸரிரிககமம என ஜண்டைஸ்வரங்காளாகப் பாடப்படும் கமகம் எவ்வாறு அழைக்கப்படும்?
   (1) திரிபுச்சம் (2) ஸ்புரிதம் (3) கம்பிதம் (4) ஆஹதம் (5) டாலு

18. ஹிந்துஸ்தானி இசையில் முதலாவதாகக் கற்பிக்கப்படும் இராகம் எது?
   (1) பிலாவல் (2) பூர்வி (3) பைரவ் (4) கமாஜ் (5) பைரவி

19. தம்புராவின் நான்கு தந்திகளும் முறையே
   (1) அனுசாரணி, சாரணி, பஞ்சமம், மந்திரம்
   (2) பஞ்சமம், சாரணி, அனுசாரணி, மந்திரம்
   (3) அனுசாரணி, மந்திரம், பஞ்சமம், சாரணி
   (4) சாரணி, அனுசாரணி, பஞ்சமம், மந்திரம்
   (5) பஞ்சமம், அனுசாரணி, சாரணி, மந்திரம்

20. ஸாவேரி இராகத்தின் தாய்ராகம் எது?
   (1) சங்கராபரணம் (2) கரகரப்பிரியா (3) ஷண்முகப்பிரியா
   (4) மாயாமாளவகௌளை (5) சூர்யகாந்தம்

21. சந்த அமைப்போடு பாடப்படும் பாடல் வகைகளை அருளியவர்
   (1) எம்.எஸ்.சுப்புலட்சுமி (2) சுவாதிதிருநாள் மகாராஜா
   (3) பாபநாசம்சிவன் (4) மணிவாசகர்
   (5) அருணகிரிநாதர்

22. கதிபேதங்களினால் உண்டாகும் தாளங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   (1) 75 (2) 108 (3) 175 (4) 7 (5) 52

23. கீழ்வரும் இராகங்களுள் கனபஞ்சக இராகம் அல்லாதது எது?
   (1) நாட்டை (2) கௌளை (3) பௌளி (4) ஆரபி (5) ஸ்ரீ

24. அஷ்டபதியை அருளிய வாக்கேயகாரர் யார்?
   (1) சாரங்கதேவர் (2) ஜெயதேவர் (3) சாம்பமூர்த்தி (4) க்ஷேத்ரக்ஞர் (5) வெங்கடமகி

25. விவாதி தோஷமற்ற இராகங்களின் எண்ணிக்கை யாது?
   (1) 40 (2) 32 (3) 72 (4) 36 (5) 24

❖ **26 - 30 வரையான வினாக்களுக்கான விடைகளை தரப்பட்ட இசைக்கலைஞர்களில் இருந்து தெரிவு செய்க.**

A – பாலச்சந்தர்

B – திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை

C – அரியக்குடிஇராமானுஜ ஐயங்கார்

D – லால்குடி ஜெயராமன்

E – செம்பை வைத்தியநாதபாகவதர்

26. சங்கீத சாஸ்திர அலங்கார விருதைப் பெற்ற இசைக்கலைஞர்
(1) A (2) B (3) C (4) D (5) E

27. கர்நாடக இசையின் சிறப்பம்சமாகிய கமகங்களை வெளியிட வீணை வாத்தியம் மிக உகந்தது என உணர்ந்து செயற்பட்ட கலைஞர்
(1) A (2) B (3) C (4) D (5) E

28. வயலின் வாத்தியத்தை வாசிப்பதில் தனக்கென ஒரு பாணியை இசை உலகிற்கு வழங்கிய இசைக் கலைஞர்
(1) A (2) B (3) C (4) D (5) E

29. ஸ்ரீலலிதாதாசன் கீர்த்தனைகள் என்ற நூலை வெளியிட்ட இசைக்கலைஞர்
(1) A (2) B (3) C (4) D (5) E

30. நாதஸ்வர வாத்தியத்தை வாசிப்பதில் விற்பன்னராகிய இசைக்கலைஞர்
(1) A (2) B (3) C (4) D (5) E

31. பிரகலாதபக்தி விஜயம் என்ற இசை நாடகத்தினை அருளிய வாக்கேயகாரர்
(1) சியாமாசாஸ்திரிகள் (2) தியாகராஜசுவாமிகள்
(3) முத்துஸ்வாமிதீட்சிதர் (4) அருணகிரிநாதர்
(5) மைசூர் வாசுதேவாச்சாரியார்

32. சகல வாத்தியம் என்பதற்கு உதாரணமாக அமையும் வாத்தியம்
(1) புல்லாங்குழல் (2) வயலின் (3) வீணை (4) நாதஸ்வரம் (5) தம்புரா

33. பஞ்சம வர்ஜ இராகங்களுள் ஒன்றாக அமைவது
(1) ஸ்ரீரஞ்சனி (2) மோகனம் (3) சாவேரி (4) ஹம்சத்வனி (5) சுத்தசாவேரி

34. அன்னையும் பிதாவும்....... என்ற அடதாள வர்ணத்தை இயற்றியவர்
(1) பாபநாசம் சிவன்
(2) திரு. கே. பொன்னையாப்பிள்ளை
(3) ஸ்வாதிதிருநாள்மகாராஜா
(4) திரு. எல். திலகநாயகம்போல்
(5) தரங்கம்பாடி பஞ்சநாதஐயர்

35. சுருதி நிர்ணயிக்கப்பட்ட தாள வாத்தியம்
(1) புல்லாங்குழல் (2) மிருதங்கம் (3) கடம் (4) தபேலா (5) தவில்

36. சியாமாசாஸ்திரிகளின் சொத்து என அழைக்கப்படும் இராகம்
(1) ஷண்முகப்பிரியா (2) சாவேரி (3) சுத்தசாவேரி
(4) ஆனந்தபைரவி (5) பைரவி

37. இராகத்திலோ சங்கதியிலோ வரக்கூடிய முடிவு ஸ்வரம் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) க்ரகம் (2) பகுத்வம் (3) அம்சம் (4) சன்னியாசம் (5) நியாசம்

38. அருணகிரிநாதரால் முதன்முதலில் பாடப்பட்ட திருப்புகழ்
(1) துள்ளுமதவேட்கை (2) முத்தைத்தரு பத்தித் (3) நிறைமதிமுகமெனு
(4) ஒருபொழுதும் (5) அபகாரநிந்தைப்பட்டு

39. மைசூர் மகாராஜாவினால் காயக சிகாமணி என்ற பட்டத்தைப் பெற்ற இந்திய இசைக் கலைஞர்.
(1) செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயங்கார்
(2) அரியக்குடி இராமானுஜ ஐயங்கார்
(3) செம்பை வைத்தியநாத பாகவதர்
(4) மைசூர் டி.சௌடையா
(5) பாலக்காடு மணிஐயர்

40. ஒரு கிருதியின் சாகித்தியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வரும் அணி
(1) மகுடஸாகித்தியம் (2) யமகம் (3) மணிப்பிரவாளம்
(4) சொற்கட்டு சாகித்தியம் (5) ஸ்வராக்ஷரம்

41. பஞ்ச சாமரம் என்ற வர்ண மெட்டு அமைந்துள்ள இராகம்
(1) வசந்தா (2) கமாஸ் (3) சாவேரி
(4) ஆபோகி (5) ஆனந்தபைரவி

42. திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரப்பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) திருக்கடைக்காப்பு (2) விருத்தாப்பிய தேவாரம் (3) திருப்பாட்டு
(4) யௌவன தேவாரம் (5) பால்யதேவாரம்

43. பாவயாமி ரகுராமம் என்ற இராகமாலிகையை இயற்றிய வாக்கேயகாரர்
(1) ஸ்வாதிதிருநாள் மகாராஜா (2) தரங்கம்பாடி பஞ்சநாதஐயர்
(3) எல்.திலகநாயகம் போல் (4) பாபநாசம் சிவன்
(5) திருகோகர்ணம் சுப்பையர்

44. ஹிந்துஸ்தானி இசையில் துர்க்கா என்று அழைக்கப்படும் இராகம்.
(1) ஆபோகி (2) சுத்தசாவேரி (3) சாவேரி (4) கமாஸ் (5) காபி

45. வாத்தியத்திரயத்தில் வரும் வாத்தியங்களின் ஒழுங்கு முறையே
(1) புல்லாங்குழல், வீணை, மிருதங்கம்
(2) மிருதங்கம், புல்லாங்குழல் வீணை
(3) வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்,
(4) புல்லாங்குழல், மிருதங்கம், வீணை
(5) வீணை, மிருதங்கம், புல்லாங்குழல்

46. தேவார முதலிகளால் தேவாரப்பாடல்கள் அருளிச் செய்யப்பட்ட காலப்பகுதி
(1) கி.பி. 7ம் 8ம் 9ம் நூற்றாண்டு
(2) கி.பி. 11ம் 12ம் நூற்றாண்டு
(3) கி.பி. 3ம் 4ம் 5ம் நூற்றாண்டு
(4) கி.பி. 17ம் 18ம் 19ம் நூற்றாண்டு
(5) கி.பி. 13ம் 14ம் 15ம் நூற்றாண்டு

47. சதுஸ்ருதி தைவதம், சாதாரண காந்தாரம் ஆகிய ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் சக்கரம் எது?
(1) ருத்ர (2) பாண (3) ரிஷி (4) திசி (5) ருத்ர

48. ஜெகதீஸ்வரி என்ற சௌக்ககாலக் கிருதியை இயற்றியவர்
(1) முத்துஸ்வாமி தீட்சிதர்
(2) திருவாரூர் இராமசாமிப்பிள்ளை
(3) பட்டணம் சுப்பிரமண்யஐயர்
(4) அருணாச்சல அண்ணாவி
(5) ஜி.என்.பாலசுப்பிரமணியம்

49. வக்ர ராகத்திற்கு உதாரணமாக அமைவது
(1) ஆபோகி (2) சாவேரி (3) கமாஸ் (4) சுத்தசாவேரி (5) வசந்தா

50. வெளிப்படையாக சிருங்கார ரசத்தை வெளிப்படுத்தும் உருப்படி
(1) அஷ்டபதி (2) தில்லானா (3) ஜாவளி (4) கீதம் (5) க்ருதி

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | கர்நாடக சங்கீதம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01. i) தசவித கமகங்களைத் தருக
ii) அவற்றுள் ஐந்தினை உதாரணத்துடன் விளக்குக. (5 + 15 = 20 புள்ளிகள்)

02. i) பெருவங்கியம் என அழைக்கப்படும் வாத்தியம் எது?
ii) அதன் படம் வரைந்து பாகங்களைக் குறிக்க.
iii) அதனை வாசிக்கும் முறையை விபரிக்க.
iv) இவ்வாத்தியத்தை வாசித்துப் புகழ்பெற்ற கலைஞர்கள் இருவரின் பெயர்களை எழுதுக.
(2 + 6 + 8 + 4 = 20 புள்ளிகள்)

03. i) ஜனகாராகங்களின் நான்கு இலட்சணங்களையும் எழுதுக.
ii) ஜன்னிய இராகப் பிரிவுகளை எழுதுக.
iii) அவற்றுள் மூன்றினை உதாரணத்துடன் விளக்குக. (4 + 4 + 12 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

04. கீழே தரப்பட்ட உருப்படிகளுள் இரண்டிற்கு விரிவான இலட்சணம் எழுதுக.
i) திருப்புகழ்
ii) இலட்சணகீதம்
iii) பதம்
iv) தில்லானா
v) ஜாவளி (10 + 10 = 20 புள்ளிகள்)

05. i) முவ்வகோபால என்ற முத்திரையை உடைய வாக்கேயகாரர் யார்?
ii) இவரது வரலாற்றையும் இசைத்தொண்டினையும் விளக்குக. (2 + 18 = 20 புள்ளிகள்)

06. கீழ் தரப்பட்ட இராகங்களில் இரண்டிற்கு விரிவான இலட்சணம் எழுதுக.
i) ஹிந்துஸ்தான் காபி
ii) ஸ்ரீரஞ்சனி
iii) ஆரோகண அவரோகணத்திலேயே அந்நியஸ்வரம் ஒலிக்கும் இராகம்
iv) 56 ஆவது மேளராகம்
v) ஸரிகமதஸ் - ஸ்தமகரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்
(10 + 10 = 20 புள்ளிகள்)

07. கீழே தரப்பட்ட வாக்கேய காரர்களைக் கண்டுபிடித்து அவர்களுள் ஒருவரின் வரலாற்றினையும் இசைப்பணியையும் எழுதுக.
i) The magic flute என்ற நூலை எழுதியவர்
ii) டெல்லி சமஸ்தான சுல்தானின் ஆஸ்தான வித்வான்
iii) நான் சிங்காசனத்திற்கு வருகின்றேன்
iv) ராம்தானு பாண்டே என்ற இயற்பெயரை உடையவர்
v) இலக்ஷண ஸங்கிரக என்ற நூலை எழுதியவர் (5 + 15 = 20 புள்ளிகள்)

08. i) மனோதர்ம சங்கீதத்தின் ஐந்து பிரிவுகளையும் தருக.
ii) அவற்றில் மூற்றை விளக்குக. (5 + 15 = 20 புள்ளிகள்)